بسم الله الرحمن الرحيم

﴿ قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِى يُحْبِبْكُمُ ٱللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَٱللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ﴿٣١﴾ ﴾ سورة آل عمران : ٣١

''நபியே நீங்கள் கூறுங்கள், நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான்"-ஆல இம்ரான்:31

# தஸ்பீஹ் தொழுகை பற்றிய ஹதீஸ் ஆதாரபூர்வமானதா?

**ஒரு வணக்கம் அங்கீகரிக்கப்படுவதற்கு பின்வரும் இரண்டு நிபந்தனைகள் உள்ளன :**

1. **'இக்லாஸ்' (الإخلاص) : தூய எண்ணத்துடன் வணக்கத்தைச் செய்தல். அதாவது, மனிதர்களின் திருப்தியை எதிர்பாராது அல்லாஹ்வின் திருப்தியை எதிர்பார்த்து ஒரு வணக்கம் செய்யப்படல் வேண்டும்.**

2. **'இத்திபாஉ' (الاتباع) : அவ்வணக்கத்தில் நபியவர்களைப் பின்பற்றல் வேண்டும். நபி (ஸல்)அவர்கள் வழி காட்டாத வணக்கங்கள் ''பித்அத்'' ஆகும். பலவீனமான அல்லது பொய்யான ஹதீஸில் கூறப்பட்ட வணக்கமும் பித்அத் ஆகும். உதாரணமாக மஃரிப் தொழுகைக்கும் இஷாத் தொழுகைக்கும் இடையில் தொழப்படும் அவ்வாபீன் தொழுகை, சூரியன் உதித்த பின் தொழும் ''இஷ்ராக்'' தொழுகை ஆகியவற்றில் வந்த ஹதீஸ்கள் பலவீனமானவைகள் ஆகும். எனவே இத் தொழுகைகள் பித்அத்கள் ஆகும். இவ்வடிப்படைகளின் ஒளியில் தஸ்பீஹ் தொழுகையை நோக்குவோம் :**

## தஸ்பீஹ் தொழுகை பற்றிய ஹதீஸ்

روى أبو داود (1299) وابن ماجه (1387) من طريق موسى بن عبد العزيز عن الحكم بن أبان عن عكرمة عن ابن عباس – رضي الله عنهما – أن رسول الله – صلى الله عليه وسلم – قال للعباس بن عبد المطلب : يا عباس ! يا عماه !! ألا أعطيك ؟ ألا أمنحك ؟ ألا أَحْبُوْك ؟ ألا أفعل بك عشر خصال ؛ إذا أنت فعلت ذلك غفر الله لك ذنبك أوله وآخره ، قديمه وحديثه ، خطأه وعمده ، صغيره وكبيره ، سره وعلانيته ، عشر خصال : أن تصلي أربع ركعات ، تقرأ في كل ركعة فاتحة الكتاب وسورة ، فإذا فرغت من القراءة في أول ركعة وأنت قائم قلتَ : سبحان الله والحمد لله ولا إله إلا الله ، والله أكبر ، خمس عشرة مرة ثم تركع فتقولها وأنت راكع عشرا ثم ترفع رأسك من الركوع فتقولها عشرا ثم تهوى ساجدا فتقولها وأنت ساجد عشرا ثم ترفع رأسك من السجود فتقولها عشرا ثم تسجد فتقولها عشرا ثم ترفع رأسك فتقولها عشرا ، فذلك خمس وسبعون في كل ركعة ، تفعل ذلك في أربع ركعات ، إن استطعت أن تصليها في كل يوم مرة فافعل ، فإن لم تفعل ففي كل جمعة مرة ، فإن لم تفعل ففي كل شهر مرة ، فإن لم تفعل ففي كل سنة مرة ، فإن لم تفعل ففي عمرك مرة .

**இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம்) அப்பாஸ் பின் அப்தில் முத்தலிபை நோக்கிக் கூறியதாவது:- அப்பாஸே! எனது பெரிய தந்தையே! நான் உங்களுக்கு வழங்கட்டுமா? உங்களுக்குக் கொடுக்கட்டுமா? உங்களுக்குக் கைமாறு இல்லாமல் கொடுக்கட்டுமா? உங்களில் பத்து விடயங்களை ஏற்படுத்தட்டுமா? <u>அதனை நீங்கள் செய்தால் அல்லாஹ் உங்களது பாவங்களில் முன்னையது, பின்னையது, பழையது, புதியது, தவறுதலாக செய்தது, தெரிந்து கொண்டே செய்தது, சிறியது, பெரியது, இரகசியமானது, பரகசியமானது ஆகிய அனைத்தையும் மன்னித்துவிடுவான்</u>. நீங்கள் நான்கு ரக்அத்துக்கள் தொழவேண்டும். ஒவ்வொரு ரக்அத்திலும் ஸூரதுல் பாதிஹாவையும் மற்றொரு ஸூராவையும் ஓத வேண்டும். முதல் ரக்அத்திலே ஓதி முடிந்ததும் நிற்கும் நிலையிலேயே ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹூ வல்லாஹூ அக்பர் என பதினைந்து முறை கூறுங்கள். பின்னர் நீங்கள் ருகூஃ செய்து ருகூஃவில் இருந்த வண்ணம் அதனைப் பத்து முறை கூறுங்கள். பின்னர் உங்களது தலையை ருகூஃவிலிருந்து உயர்த்தி அதனைப் பத்து விடுத்தம் கூறுங்கள். பின்னர் குனிந்து ஸுஜூது செய்து, ஸுஜூதுசெய்த நிலையிலேயே அதனைப் பத்து முறை கூறுங்கள், பின்னர் உங்களது தலையை ஸுஜூதிலிருந்து உயர்த்தி பத்து முறை கூறுங்கள், பின்னர் ஸுஜூது**

**செய்து பத்து முறை அதனைக் கூறுங்கள், பின்னர் உங்களது தலையை உயர்த்தி அதனைப் பத்து முறை கூறுங்கள். எனவே அது ஒவ்வொரு ரக்அத்திலும் எழுபத்தி ஐந்தாகும். அதனை நான்கு ரக்அத்துக்களிலும் செய்து கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் ஒருமுறை உங்களால் செய்ய முடிந்தால் செய்துகொள்ளுங்கள், அவ்வாறு செய்யாவிட்டால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் ஒரு முறை (செய்துகொள்ளுங்கள்,) அவ்வாறு செய்யாவிட்டால் ஒவ்வொரு மாதத்திலும் ஒருமுறை (செய்துகொள்ளுங்கள்,) அவ்வாறு செய்யாவிட்டால் ஒவ்வொருவருடத்திலும் ஒரு முறை (செய்து கொள்ளுங்கள்,) அவ்வாறு செய்யாவிட்டால் உங்களது வாழ்நாளில் ஒரு முறை (செய்து கொள்ளுங்கள்) (அபூதாவூத் : 1299, இப்னுமாஜஹ் : 1387)**

**இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் பலவீனமான இரு அறிவிப்பாளர்கள் காணப்படுகின்றார்கள். அத்துடன் இந்த ஹதீஸின் மூல வாக்கியத்தில் இட்டுக்கட்டப்பட்ட பொய்யான ஹதீஸின் சில அடையாளங்களும் காணப்படுகின்றன. இலகுவான அமலுக்கு மாபெரும் நன்மை கிடைப்பதாக ஒரு ஹதீஸில் காணப்படுவது அது இட்டுக்கட்டப்பட்ட பொய்யான ஹதீஸ் என்பதற்கு அடையாளமாகும்.**

**<u>ஹதீஸ் பலவீனமானது என்பதற்குரிய விளக்கம்</u>**

**ஒரு ஹதீஸை ஆதாரபூர்வமாதாக ஏற்றுக்கொள்வதற்கு அந்த ஹதீஸை அறிவிப்பவர் முக்கிய இரு நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

1. **ஹதீஸ் அறிவிப்பாளர் நம்பகரமானவராகவும், உண்மை பேசுபவராகவும் இருத்தல் வேண்டும்.**
2. **கிரகிக்கும் ஆற்றல் மிக்கவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வாற்றல் மனன சக்தியையும் பிழையின்றி எழுதிப் பாதுகாப்பதையும் குறிக்கும்.**

   **இந்த வகையில் நோக்கும்போது தஸ்பீஹ் தொழுகை ஹதீஸ் பின்வரும் காரணங்களினால் ஆதாரமற்றதாக ஆகிவிடுகிறது :**

   ✓ **மேற்படி ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் அல் ஹகம் பின் அபான் (الحكم بن أبان) காணப்படுகிறார். இவர் உண்மை உரைப்பவராக இருந்தாலும் ஹதீஸ்களில் தவறுகள் இழைப்பவராக அறிஞர்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். மேலும், இடிமுழக்கம், மலக்கின் குரல் என்ற முரண்பட்ட ஹதீஸையும் அறிவித்தவரும் கூட. (தஹ்தீபுல் கமால்: 7/86 – 88, மீஸான் அல்-இஃதிதால் : 2 - )**

   ✓ **மேலும் அறிவிப்பாளர் தொடரில் மூஸா பின் அப்தில் அஸீஸ் (موسى بن عبد العزيز) என்பவரும் காணப்படுகிறார். இவர் உண்மை பேசக்கூடியவராக இருந்தாலும் மனன சக்தியில் பலவீனமானவர். எனவே அவர் தனித்து அறிவிக்கும் ஹதீஸை ஏற்க முடியாது. (தஹ்தீபுல் கமால் , மீஸானுல் இஃதிதால் )**

   **இதை இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு விளக்குகிறார்கள் :**

قال الحافظ ابن حجر في التلخيص الحبير في تخريج أحاديث الرافعي الكبير 2 / 54 وهو كتاب نفيس في نقد أحاديث الأحكام – : والحق أن طرقه كلها ضعيفة وإن كان حديث ابن عباس يقرب من شرط الحسن إلا أنه شاذ ؛ لشدة الفردية فيه ، وعدم المتابع والشاهد من وجه معتبر ، ومخالفة هيئتها لهيئة باقي الصلوات ، وموسى بن عبد العزيز – وإن كان صادقا صالحا – فلا يحتمل منه هذا التفرد .

3. **மூஸா பின் அப்தில் அஸீஸின் அறிவிப்பாளர் தொடரில், இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் பெயர் கூறப்பட்டும், இப்ராஹீம் பின் அல் ஹகம் என்பவரின் அறிவிப்பில் கூறப்படாமலும் இடம்பெற்றுள்ளது. இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் பெயர் கூறப்படாமல் வந்த அறிவிப்பே மிக நுணுக்கமான ஹதீஸ்கலை விதிகளின்படி ஏற்புடையதாகும். இதன் பிரகாரம் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் விடுபட்டுக்**

காணப்படும் மூஸா பின் அப்தில் அஸீஸின் அறிவிப்பு ஹதீஸ் கலை விதியின்படி பலவீனம் எனும் நிலையை அடைகின்றது. (تعليق الشيخ طارق عوض الله على النكت على كتاب ابن الصلاح لابن حجر 3/372-378)

4. மேற்படி பலவீனமான இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் ஹதீஸுக்குச் துணைச் சான்றாக, வேறு ஸஹாபாக்களின் சில ஹதீஸ்களும் (الشواهد) காணப்படுகின்றன. அதேபோன்று அந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களுக்கு உடன்பட்ட அறிவிப்பாளர்களின் ரிவாயத்துக்களும் (المتابعات) காணப்படுகின்றன. ஆனால், இவைகள் அனைத்திலும் பொய்யர்கள், தகவல் முரண்பட்ட தகவல்களைக் கூறுபவர்கள் காணப்படுகின்றார்கள். இத்தகைய தன்மைகள் உள்ளவர்களின் அறிவிப்புக்களை துணைச் சான்றாக எடுத்துக்கொள்ள முடியாது. العلل الصغير للترمذي في آخر جامعه 251/6 وعلوم الحديث لابن الصلاح ص 34

இந்தவகையில் நோக்கும்போது, பிற்காலத்தில் தோன்றிய சில அறிஞர்கள் பொய்யர்கள், முரண்பட்ட தகவல்களைக் கூறுபவர்கள் ஆகியோரின் அறிவிப்புக்களை துணை ஆதாரமாகக் கணித்து தஸ்பீஹ் தொழுகை ஹதீஸை குறைந்தபட்ச ஊர்ஜிதமுள்ள ஹதீஸின் (الحسن لغيره) தரத்திற்கு உயர்த்தியது, ஹதீஸ்கலை விதிகளுக்கு முரண்பட்ட பொடுபோக்கான (تساهل) ஆய்வுமுறை என்பது தெளிவாகிறது.

5. தஸ்பீஹ் தொழுகைக்குரிய ஹதீஸ் பலவீனமானதாக இருந்தாலும், அமல்களின் சிறப்பில் அதை எடுத்துக்கொள்ள முடியும் என வாதிட முடியாது. ஏனெனில், அவ்வாறு அமல் செய்வதற்கு இரண்டு பிரதான நிபந்தனைகள் உள்ளன. அவை :

அ : கடுமையான பலவீனமானதாக இல்லாதிருத்தல் வேண்டும்.

ஆ : அந்த பலயீனமான ஹதீஸ் புதிய வணக்கத்துக்கான சான்றாக இல்லாதிருத்தல் வேண்டும்.

இவ்விரு நிபந்தனைகளும் தஸ்பீஹ் தொழுகை பற்றிய ஹதீஸில் கிடையாது. அந்த ஹதீஸ் கடுமையான பலயீனமானதாகும். மேலும் அது, புதிய வணக்கத்தை தோற்றுவிக்கிறது. (இந்நிபந்தனை பற்றி மேலதிக தகவல்களுக்கு "சுன்னா பற்றி தெளிவு பெறுவது எவ்வாறு" என்ற எனது நூலின் 23-27 பக்கங்களைப் பார்க்க)

6. தஸ்பீஹ் தொழுகை ஹதீஸின் மூலவாக்கியத்தில் அதைப் பொய்ப்படுத்தக்கூடிய அடையாளம் காணப்படுகிறது. அதில் தஸ்பீஹ் தொழுகையினால் பெரும்பாவம், பிந்திய பாவம் மன்னிக்கப்படுவதாக காணப்படுகிறது. ஒரு ஹதீஸில் இலகுவான அமலுக்கு மாபெரும் நன்மை கிடைக்கும் எனக் காணப்படுவது அது பொய் என்பதற்கு அறிகுறியாகும். ( تدريب الراوي للسيوطي : 1 / 326 ) ، فتح المغيث للسخاوي : 2 / 129 )

7. நோன்பு 27இல் தஸ்பீஹ் தொழுகையை பள்ளிவாயல்களில் ஜமாத்தாக நடாத்தி, அடையாளப்படுத்துவது பித்அத் ஆகும். இச்செயல் பாமர மக்களை இபாதத் விடயங்களில் ஷரீஅத்துக்கு முரணான முறையில் வழிநடாத்துகிறது. எனவே, பள்ளிவாயல் நிருவாகிகள் இந்த பித்அத்தை நீக்குவதற்கு கடமைப்பட்டிருக்கிறார்கள்.

**தஸ்பீஹ் தொழுகை பற்றி ஷாபி மத்ஹப் கூறுவது என்ன?**

இமாம் அபூஹனீபா, இமாம் மாலிக், இமாம் ஷாபி ஆகியோர்கள் தஸ்பீஹ் தொழுகை பற்றி கேள்விப்படவே இல்லை. இமாம் ஷாபி அவர்களது பிரதான சீடர்களாகிய முஸனி, புவைதி, ரபீஃ ஆகியோர் இத்தொழுகை பற்றிப் பேசவே இல்லை.

பிற்காத்தில் தோன்றிய அபூஹாமித், மஹாமிலி, ஜுவைனி, இமாமுல் ஹரமைன், கஸ்ஸாலி, காழி ஹுஸைன், பகவி, முதவல்லி, ரூயானி போன்றோர்கள், தஸ்பீஹ் தொழுகையை ஜமாத்தாக இல்லாமல் தனித்துத் தொழப்படவேண்டிய ஸுன்னத்தான வணக்கமாக ஷாபி மத்ஹபில் அறிமுகப்படுத்தினர்.

**ஆனால், மத்ஹபில் பத்வாக்குரிய சுய ஆய்வாளராகக் கருதப்படும் இமாம் நவவி (ரஹ்) அவர்கள் தங்களது இறுதி நூலாகிய ‘‘ஷர்ஹுல் முஹத்தப்’’ என்ற நூலில் தஸ்பீஹ் தொழுகை ஸுன்னத் என்பதை மறுத்துரைத்துள்ளார்கள். அவரின் மூல வாக்கியம் வருமாறு :**

قال الإمام النووي في المجموع شرح المهذب 54/4 – وهو آخر كتبه – : حديثها ضعيف ، وفيها تغيير لنظم الصلاة المعروف ، فينبغي ألا تُفعل بغير حديث ، وليس حديثها بثابت ، قال الترمذي : ولا يصح منه كبير شيء ، وكذا قال العقيلي : ليس في صلاة التسبيح حديث يثبت ، وكذا ذكر أبو بكر بن العربي وآخرون أنه ليس فيها حديث صحيح ولا حسن .

**ஷாபி மத்ஹபைத்தான் பின்பற்ற வேண்டும் என வாதிடும் சில ஆலிம்கள் பத்வாக்குரிய மத்ஹபைப் புறக்கணித்துவிட்டு, தஸ்பீஹ் தொழுகையை நோன்பு 27இல் அடையாளப்படுத்தி, ஜமாத்தாகத் தொழுகின்றார்கள். இவர்கள் இரண்டு முரண்பாடுகளைச் செய்கின்றார்கள் :**

1. **தஸ்பீஹ் தொழுகை ஸுன்னத் அல்ல என்ற ஷாபி மத்ஹப் பத்வாவை புறக்கணித்தமை.**
2. **தஸ்பீஹ் தொழுகையை ஜமாத் இல்லாமல் தனியாகத் தொழவேண்டும் என்ற சில ஷாபி மத்ஹப் இமாம்களின் கருத்துக்கு முரண்பட்டமை.**

**ஸஹீஹான ஹதீஸில் காணப்படும் நபி (ஸல்) அவர்கள் வழிகாட்டிய இபாதத் முறைகள் அல்லாஹ்வின் திருப்தியை அடைவதற்கு போதுமானவைகளாகும். பித்அத்தான வணக்கங்களைச் செய்து அவனின் கோபத்துக்குள்ளாவது, ஒரு முஃமினான மனிதனைப் பொறுத்தவரை புத்திசாலித்தனம் அல்ல. நபியவர்களின் ஸுன்னாவைப் பின்பற்றி பித்அத்துக்களைத் தவிர்ந்து நடக்க இறைவன் அருள் புரிவானாக.**

**விமர்சனம் :**

**கலாநிதி UL. அஹ்மத் அஷ்ரப் (Ph.D)**

**துணைப் பேராசிரியர்,**

**மன்னர் காலித் பல்கலைக்கழகம் (முன்னாள்),**

**அப்ஹா, சஊதி அரேபியா**

**வெளியீடு:**

**இஸ்லாமிக் சென்றர்**

**த.பெ. இல - 10**

**காத்தான்குடி**

**25.08.2011**